**16 வேதத்துக்குப்பொருள்அருளிச்செய்தபடலம்**

பிரளத்தில் உலகம் அழிந்தபின் சிவபெருமான் திருமாலை உருவாக்கினார். அவர் உடலிலிருந்து ப்ரம்மா படைக்கப்பட்டார். சிவபெருமான் திருவாக்கினின்று பிரணவமும் வேதமும் பிறந்தன.

கண்ணுவர், கருக்கர் முதலான முனிவர்கள் அதன் பொருள் உணராது வேதத்தை ஓதினர். அவர்கள் தவவலிமை மிக்க அரபத்தர் எனும் முனிவரிடம் தங்களுக்கு வேதத்தினை விளங்குமாறு வேண்டினர். அரபத்தர், வேதத்தை அருளிய ஈசனே அதன் பொருளை உணர்த்துவார் என்றும், புண்ய நகரமான மதுரைக்குச் சென்று சோமசுந்தர கடவுளை வணங்குமாறு கூறினார். இருபத்திரண்டு எழுத்துக்கள் கொண்ட மேதாமந்திரத்தை செபித்து பயன் அடையுமாறு கூறி, அம்மந்திரத்தையும் அவர்களுக்கு உபதேசித்து அருளினார்.

கண்ணுவர் முதலானமுனிவர்கள்மதுரையைஅடைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, கல்லால் ஆன மரநிழலில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி சன்னதியில் அமர்ந்து, கார்த்திகைபௌர்ணமி முதல் அடுத்த ஆண்டு கார்த்திகை பௌர்ணமி வரை ஓராண்டு காலம் அம்மையப்மனை பூஜை செய்து வழிப்பட்டனர். அதன் பயனாக ஐயன் முப்பத்திரண்டு லக்ஷணங்களும் பொருந்திய பதினாறு வயது நிரம்பிய பிராமணர் குரு வடிவில் காட்சி அளித்தார்.

வேதத்தின் பொருள்கள் மிகவும் ரகசியமானது. அதை அறிந்தால் இம்மைக்கும் மறுமைக்கும் பலன் அளிக்கும். வேதம் கரும காண்டம், ஞான காண்டம் என இரு வகைப்படும். கருமகாண்டம் சொக்கலிங்கத்தின் பூஜா விதிகளை விளக்குகிறது. ஞான காண்டம் சத்சிதானந்த அறிந்து வழியைகூறுகிறது.

வேத பொருள்களை எவரும் அறிந்துக் கொள்வது அரிதானதால், கருமமார்கத்தினாலோ ஞானமார்கத்தினாலோ அறிந்தால் அதுவே வேதத்தை அறிந்ததாகும் என்று கூறி அன்புடன் அவர்கள் முதுகில் தம் கரத்தால் தடவிக்கொடுத்து சிவலிங்கத்துள் சென்று மறைந்தார்.

**பல்லவி**

கண்ணுவரும் கருக்கரும் வேதப் பொருள்ளுணர
அரபத்தர் அருளிய மேதாமந்திரம் ஓத

**அனுபல்லவி**

கண்டோர் அதிசயிக்க கல்லாலான மரத்தின் கீழ்
அமர்ந்த குருமூர்த்தியாய் காட்சியளித்தாய்

**சரணம்**

வேதமும் ஒன்றே வேதப் பொருளும் ஒன்றே
அதுவே பரப்ரம்மம் சொக்கலிங்கம் என்று
வேதமும் அறியா உன்னைகர்ம ஞான நெறியில்
கண்டிடலாம் என்று சொல்லி மறைந்தாய்